# படகர் சமய நம்பிக்கை

படகர்க்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. 0தேவரு, சோமி என்பன கடவுளைக் குறிக்கும் பெரு வழக்கான சொற்கள். எத்தெ, அய்யா (எரெயோடய்யா) என்பன குறிப்பாக முன்னோரைக் கடவுளராகக்கொண்டு அழைக்கும் சொற்கள். முன்னோர் வழிபாடு இவர்களிடம் ஆழமாக வேர் ஊன்றியுள்ளது. அவ்வகையில் வரலாற்றோடு கூடிய பதினான்கு எத்தெகளை வழிபட்டிற்கு உரிய தெய்வங்களாகக் கொண்டுள்ளனர். படகர் குலதெய்வம் எரெயோடய்ய என்று அழைக்கப்பெறும் 0தெவ்வ ஆகும். ஒவ்வொரு குலத்திற்கு ஒவ்வொரு 0தெவ்வ உண்டு. என்றாலும் அனைத்து 0தெவ்வாக்களையும் ஒன்றுபோல் கொண்டு ஒரே பெயரால் குறிப்பிட்டு வழிபட்டு வருகின்றனர். கரியபெட்டராய, கக்கரய்ய என்பன போன்றும் அந்தந்தப் பிரிவு களுக்குக் குல தெய்வங்கள் அடையாளம் காணப்படுகின்றன. மகாலிங்க, மாதேஸ்வரா, ஜடெய சோமி, ரங்கநாத, என்பன போன்றும் இறைவனுக்குப் பெயரிட்டும் வழிபாடு நடந்து வருகிறது. எரெயோடய்யனைச் சிவனாகக்கொண்டு ஒப்பிட்டு வணங்குவதும் உண்டு. என்றாலும் பிறவிடங்களில் உள்ளதுபோன்று இறைவன் தொடர்பாக எவ்வகை புராணக் கதைகளும் வழக்கூறவில்லை.

ஞாயிற்றை வணங்குதல், திங்களை, குறிப்பாகப் பிறையினை வணங்குதல், மலையுச்சியில் தெய்வம் இருப்பதாகக் கொண்டு வழிபடுதல், ஆற்று நீரைத் தொட்டு வணங்கிய பின்னரே ஆற்றில் கால்வைத்தல், நாவல்போன்ற மரத்தினை வணங்குதல் போன்றனவற்றைக் கணக்கில் கொண்டால் படகர் வழிபாட்டில் இயற்கை வழிபாடு மேலோங்கி இருக்கிறது என்று சொல்ல வேண்டும். கால் நடைகளைப் போற்றுதல், விளைநிலத்தை வணங்குதல் முதலியன இவர்கள் தொழிலோடு இணைந்தவற்றை வணங்குதல் என்னும் வகையில் சேர்க்கலாம், உலை, வீட்டுக்கூரை, அம்மிக்கல், உரல், அட்டாலை, விளக்கு மாடம் (எடெ 0பாயிலு), வாசக்கால் போன்றனவற்றிற்குப் புனிதத்தன்மை அளித்தல் வாழ்விடத்திற்கு முதன்மை இடம் அளிக்கும் தன்மையன என்று குறிப்பிடலாம். முறம், படி, குளகம் போன்றவற்றிற்குப் புனிதத்தன்மை கொடுத்தல் பயன்படு பொருள்களுக்கு முதன்மையிடம் கொடுத்தலாகும்.

தொப்பெ (புதிய மாட்டுச்சாணம்) தூடை மரத்தின் இலை முதலியன மாசுகளைப் போக்கித் தூய்மை உண்டாக்கும் என நம்புகின்றனர். குளித்தல் தோல்பொருள்களைத் பயன்படுத்தாமல் இருத்தல், முகமழித்தல் செய்யாமல் இருத்தல், நகத்தை வெட்டாமல் இருத்தல், வீட்டு உணவை மட்டுமே உண்ணல், புலால் தவிர்த்தல் முதலியன நோன்பு

இருப்பதற்கு வேண்டிய தன்மைகள். எண்ணெய் இட்டுத்தாளித்தல், தவசங்களைப் பொரித்தல் ஆகியவை பூசை நாள்களில் இருக்கா. நாள்களுள் செவ்வாய், சனி ஆகிய நாள்கள் மட்டுமே கறிசமைக்கும் நாள்கள். திங்கள், வெள்ளி ஆகியன பூசைக்குரிய நாள்கள். திங்கள், புதன் ஆகியன திருமணத்திற்கு உரிய நாள்கள். விடியும் முன் கெட்ட நேரம் என்பதில்லை எனக் கொண்டுள்ளனர். வளர்பிறை நாள்கள் புனிதமானவை. வளர்பிறை நாள்களில் கோயில் திருவிழாக்கள் இருக்கும். திருமணம் முதலியனவும் வளர்பிறை நாள்களிலேயே இருக்கும்.

இரு அறைகள் கொண்ட வீட்டில் உள் அறையைச் சமையலுக்கும் பால்பொருள்கள் வைப்பதற்கும் பயன்படுத்த வேண்டும். ஆண்கள் உண்பதும் உறங்குவதும் உள்ளறையில்தான். பெண்கள் வெளியறையில் உண்ண வேண்டும்; உறங்க வேண்டும். வெளியாள்கள் உள்ளறைக்குச் செல்ல அனுமதி இல்லை. உள்ளறையில் உள்ள ஆகோட்டுப்பகுதிக்குப் பெண்கள் செல்ல அனுமதி இல்லை. அவ்விடத்தை ஆண்களே தூய்மையாக்க வேண்டும். அவ்விடத்தைச் சாணமிட்டு மெழுகுவதையும் ஆண்களே செய்ய வேண்டும். இப்படியாகச் சில தூய்மை நடவைக்கைகளைக் கொண்டுள்ளனர்.

முன்னோர் வாழ்ந்த வீடுகளே படகர்க் கோயில்கள். வீட்டு வெளிச்சத்திற்காக ஏற்றப்படும் விளக்கே முதன்மையான வழிபாட்டுப்பொருள். விளக்கில் அகல் விளக்கு மேலானது. சமையல் அடுப்பின் சாம்பலே திருநீறு. வழிபாட்டு முறையும் மிக எளிமையானது. வழிபாட்டு வாசகங்கள் அனைத்தும் அனைவருக்கும் புரியும் வகையில் படகு மொழியில் அமைந்துள்ளன. படகர்களே பூசாரிகளாக இருந்து வருகின்றனர். விளக்கேற்றுதலும் நறும்புகை எழுப்புதலுமே பூசைமுறை. நீலமலைப் பூக்களை இறைப் படிமத்திற்குச் சாத்த வேண்டும். இத்தன்மைகள் அனைத்தும், இயல்பான வழிபாட்டு முறையில் அமைந்தவை; சிறப்புத் தன்மை கொண்டவை. இது அனைவருக்கும் உகந்தவை.

அண்மைக் காலங்களில் மிகப்பெரிய அளவில் கோயில்கள் அமைத்து ஆரவாரப் பூசைகள் நடந்து வருவதை ஆங்காங்கே காணமுடிகிறது. இதனால் விளையப்போகும் நன்மை தீமைகளை ஆராய வேண்டிய நிலையில் இருக்கிறோம். இவற்றால் நம் பண்டைய வழிபாட்டு முறை இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவதைப் பலரும் உணர்ந்திருப்பர். இறைவன் விரும்புவது எளிமை, மனத்தூய்மை ஆகியவற்றையே. இதை உணர்ந்து நம் பண்டைய வழிபாட்டு முறையைத் தொடர்ந்து கொண்டொழுகுவதே சாலச் சிறந்தது. பொதுவாகப் பண்டைய

இனக்குழுவினர் பூசை எளிமையான சடங்குமுறைகளைக் கொண்டது; கொண்டாட்டம் ஆண்டிற்கு ஒரு முறை என்றாற்போல் அவ்வப்போது கொண்டாடப்படும்; மக்கள்தம் உணர்வுகளின் வெளிப்பாடாக வழிபாட்டுமுறை இருக்கும்; வழிபாட்டிடம் பாறை, மரத்தடி, மேடான இடம் என்பனபோல இருக்கும்; பூசாரி அக்குலத்தைச் சார்ந்தவராக இருப்பார்; பூசாரிப்பொறுப்பு பெரும்பாலும் கால்வழியாக வருவதாக இருக்கும்; காவு கொடுத்தல் வழிபாட்டில் இருக்கும்; தெய்வம் இறங்கிக் குறி சொல்லுதல் இருக்கும்; குறிசொல்வோர் அச்சமூகத்தின் யாராக வேண்டுமானாலும் இருப்பார்; கல், மரம் போன்றவற்றாலான எளிய பொருள்களே தெய்வ அடையாளங்கள்; வழிபாட்டிடம் மிகையான கலைவடிவங்களைக் கொண்டிருக்கா; யார் வேண்டுமானாலும் படையல் செய்யலாம்; அனைவரும் சென்று வழிபடலாம்; வழிபாட்டு வாசகங்கள் இவ்வுலகத் துன்பங்களை நீக்கி இன்பம் வேண்டுவனவாக இருக்கும்; வீடுபேறு கருத்து வழிபாட்டுடன் தொடர்பு கொண்டிருக்காது.

கோலிதிப்பெ படகர் சமய நம்பிக்கையைக் காட்டும் ஒரு சிறந்த பழைய கதை. குறிப்பாக மறுபிறவி நம்பிக்கை இல்லாமல் இருப்பதைக் காட்டும் வகையில் இக்கதை அமைந்துள்ளது. மறுபிறவிக்கொள்கையைச் சமண சமயமே முதன்முதலில் வலியுறுத்தி வந்துள்ளது. மெல்ல மெல்ல அது பிற சமயத்தினரிடமும் வழக்கூன்றியுள்ளது. படகரிடையே இது வழக்குப்பெறாதது படகுச் சமுதாயம் தக்கவைத்துள்ள பழந்தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். படகர் சமய நம்பிக்கையைப் பெருமளவில் வெளிப்படுத்துவது இவர்களது சாவுச்சடங்கு. இதன் அடிப்படை மாறாமல் ஓரளவிற்கு இன்று வரை இருக்கிறது. புதுப்பிக்கும் நோக்கத்தில் பழைமையான வழிபாட்டிடங்கள் மாற்றலுக்கு உள்ளாகி வருகின்றன. அவ்வாறு மாற்றும் போது பழைய அமைப்பிலேயே இருக்குமாறு பார்த்துக்கொண்டால் பழைமையை நினைவு கொள்ளும் வகையில் இருக்கும்..